# புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை தோற்றுவிக்கும் நடைமுறையின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல்.





தேசிய கணக்காய்வு அலுவலகம்

பிரிவு EHA/TIP

கிளை TIP/B

செயல் ஒப்படைப்பு இலக்கம் TIP/B/BOI/ABCD/19/14

## உள்ளடக்கம்


| தொடர் இலக்கம் | விபரம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1. | நிறைவேற்றுப் பொழிப்பு | 03 |
| 2. | அறிமுகம் | 05 |
| 2.1 | பின்னணி | 05 |
| 2.2 | கணக்காய்விற்கான அதிகாரம் | 07 |
| 2.3 | கணக்காய்விற்கான தலைப்பை தெரிவு செய்தல் | 08 |
| 2.4 | கணக்காய்வின் குறிக்கோள்கள் | 08 |
| 2.5 | செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்கள் | 09 |
| 2.6 | உப குறிக்கோள்களும் வரையறைகளும் | 10 |
| 2.7 | கணக்காய்வு அணுகுமுறை | 11 |
| 2.8 | கணக்காய்வின் நோக்கெல்லை. | 12 |
| 3 | விபரமான கணக்காய்வு அவதானிப்புக்களும் சிபார்சுகளும் | 13 |
| 3.1 | ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களைத் தோற்றுவிப்பது சம்பந்தமாக இலங்கை முதலீட்டுச் சபையின் அடிப்படைத் திட்டங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் நடைமுறை | 13 |
| 3.2 | செயற்திட்டத்தின் செயற்திறன் | 16 |
| 3.3 | புதிய முதலீட்டு வலயத்தை தோற்றுவிப்பதன் மூலமான பொருளாதாரத் தாக்கம் | 34 |
| 4. | சிபார்சுகள் | 35 |

## 1. நிறைவேற்றுப் பொழிப்பு

---------------------------------------

இலங்கையின் பொருளாதாரத்தையும் வாழ்க்கை நிலைமையையும் அதிகரிக்கும் நடைமுறைகளுக்கு மத்தியில் வெளிநாட்டு முதலீட்டினைக் கவருதலானது ஒரு அபிவிருத்தி தந்திரோபாயமாக மிக முக்கியத்துவமானதாகும். உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல், புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்களை நாட்டில் தோற்றுவித்தல், கொடுப்பனவு மீதிப் பற்றாக்குறைக்கு ஒரு தீர்வினை வழங்குதல் ஆகிய பொருளாதார ரீதியாக பாரிய பல நலன்களை இதன் மூலம் அடைந்து கொள்ளலாம். அதற்கிணங்க காணப்படுகின்ற ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களுக்கு மேலதிகமாக புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களைத் தோற்றுவிக்கும் தேவைப்பாடு தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. 1978 இன் 04 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை அதிகாரச் சட்டத்தின் மூலம் நேரடி வெளிநாட்டு முதலீட்டினைக் கவர்தல் மற்றும் அதற்காக வசதிகளை வழங்குவதற்காக ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் தோற்றுவிக்கும் அதிகாரம் இலங்கை முதலீட்டுச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டின் பின்னர் எதுவித முதலீட்டு செயன்முறைப்படுத்தல் வலயமும் தோற்றுவிக்கப்படாத நிலைமையின் கீழ் தற்போது அமுல்படுத்தப்படுகின்ற 12 ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களின் இயலளவு போதாமையின் காரணமாக உபாயமார்க்க ரீதியாக இலக்கிடப்பட்ட பிரிவுகளுக்காக புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தும் வலயங்களை ஸ்தாபித்தல் 2017 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் பாதீட்டுப் பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கிணங்க தேவையான நிதி ஏற்பாட்டினை திறைசேரியின் மூலம் இலங்கை முதலீட்டுச் சபையின் வரிசை அமைச்சாகிய அபிவிருத்தி தந்திரோபாய மற்றும் சர்வதேச வணிக அமைச்சுக்கு வழங்குவதற்கும் அதற்கிணங்க அதிவேகப் பாதைக்கு அண்மித்த பகுதிகளில் ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாட்டிற்கு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தின் தேவைப்பாடு தீவிரம் பெற்றுள்ள இவ்வாறான கட்டத்தில் புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களாக தோற்றுவிப்பதின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு 2014 ஆம் ஆண்டிலிருந்து புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களைத் தோற்றுவிப்பதற்கான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அச்செயற்பாடானது திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டிருக்காமையானது கணக்காய்விற்கு இத்தலைப்பை தெரிவு செய்வதற்கான காரணமாகும்.

புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களைத் தோற்றுவிப்பது சம்பந்தமாக உரிய நிறுவனங்களின் கடமைகளை மதிப்பீடு செய்வது இக்கணக்காய்வின் நோக்கமாகும்.

இலங்கை முதலீட்டுச் சபை திட்டமிட்டவாறு 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் புதிய 06 முதலீட்டு செயன்முறைப்படுத்தல் வலயங்களை ஸ்தாபிப்பதற்கு உத்தேசித்திருந்தும் பிங்கிரிய மற்றும் மில்லனிய செயன்முறைப்படுத்தும் வலயங்கள் 02 இனை மாத்திரம் ஸ்தாபிக்கும் நடவடிக்கைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. மில்லனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை வெளித்தரப்பினர் கூட்டுமுயற்சியாக ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக முன்வந்த கம்பனி இக்கூட்டு முயற்சியினை முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தும் வலயங்களை நிர்மாணிக்கும் போது மேற்கொள்ளப்பட்ட சாத்திய வள ஆய்வின் போது சவால் மிக்க துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தாமையின் காரணமாக காணிகளைச் சுவீகரிப்பதனை எதிர்த்து உரிய தரப்பினர்களால் நீதிமன்ற நடவடிக்கை எடுத்ததன் காரணமாக இன்றுவரை ரூபா 2,080,533,307 செலவு செய்யப்பட்ட மில்லனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தும் வலயத்தின் செயற்பாடுகள் கைவிடப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. மில்லனிய மற்றும் பிங்கிரிய செயன்முறைப்படுத்தல் வலயங்கள் இரண்டினதும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, மாகாண அபிவிருத்தி அதிகாரச சபை, இலங்கை மின்சார சபை ஆகிய நிறுவனங்களுடன் எழுத்து மூல உடன்படிக்கைகளை மேற்கொள்ளாது ரூபா 2,488,251,337 பணம் செலுத்தப்பட்டிருந்தது என்பதுவும் அவதானிக்கப்பட்டது. பிங்கிரிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தும் வலயத்தில் வீதிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கையானது அங்கீகரிக்கப்பட்ட அளவீட்டுப் பத்திரம் இன்றி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்ட விலை விகிதங்களை மிகைத்து தயாரிக்கப்பட்டிருந்தது எனவும் நிர்மாணங்களின் நியமதரம் சம்பந்தமாக திருப்தி கொள்ள முடியாதுள்ளது என்பதுவும் அவதானிக்கப்பட்டது. முறையாக திட்டமிடப்படாததன் காரணமாக எதிர்பார்த்த இலக்குகள் அடைந்து கொள்ளப்படாமையும் அடிக்கடி அந்த இலக்குகள் திருத்தம் செய்யப்படுதலும், அத்தியாவசியமான செயற்பாடுகள் திட்டமிடப்படாமை, உடன்படிக்கைகளை மிகைத்து மேலதிக செலவுகள் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டமை ஆகிய நிலமைகளின் அடிப்படையில் செயற்திட்டத்திலிருந்து அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படாத மற்றும் உரிய தரப்பினர்களுக்கு நலன்கள் கிடைக்காத நிலைமையும் அவதானிக்கப்பட்டது.

அதற்கிணங்க செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து பிரிவுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி முறையாகத் திட்டமிடுதல், கிரய மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது அனைத்து பிரிவுகள் தொடர்பாகவும் மிகவும் சரியாக மதிப்பீட்டினைத் தயாரித்தல், செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்படுகின்ற சாத்திய வள ஆய்வின் போது எதிர்பால ஆபத்துக்கள் மற்றும் சவால்களுடனான துறைகள் தொடர்பாக முறையாக கவனம் செலுத்துதல், உட்கட்டமைப்பு வசதிகள் அல்லது சேவைகளை வழங்கும் ஒப்பந்தம் சம்பந்தமாக ஏனைய நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்கின்ற கிரய மதிப்பீடுகளின் சரியான தன்மை மற்றும் சிக்கனத்தன்மை சம்பந்தமாக விசேட கவனம் செலுத்துதல், உட்கட்டமைப்பு வசதிகள் அல்லது சேவைகளை வழங்கும் ஒப்பந்தம் சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட அளவீட்டுப் பத்திரம் இல்லாதும் எழுத்து மூலம் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னரும் வேலைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்காமை, உட்கட்டமைப்பு வசதிகள் அல்லது சேவைகளை வழங்கும் ஒப்பந்தங்களை அமுல்படுத்தும் போது அரசாங்க நிதிகளின் சிக்கனத்தன்மை, செயற்திறன் மற்றும் வினைத்திறனைப் பாதுகாக்கும் வகையில் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகளை வழங்குதலினை உடன்படிக்கை செய்யும் போது மேலதிக கிரயத்தை மேற்கொள்ளாத வகையில் திட்டமிடப்பட்ட கால அட்டவணைக்குள் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் சாதகமான நிபந்தனைகளை உள்ளடக்குதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

## 2. அறிமுகம்

----------------

### 2.1 பின்னணி

--------------

அபிவிருத்தியடைந்துவரும் ஒரு நாடாக நேரடி வெளிநாட்டு முதலீட்டினைக் கவர்தலானது இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியைத் திட்டமிடும் போது இனங்காணப்பட்ட பிரதான நடைமுறையாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1978 இன் 04 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை அதிகாரச்சட்டத்தின் மூலம் நேரடி வெளிநாட்டு முதலீட்டினைக் கவர்தல் மற்றும் அதற்காக வசதிகளை வழங்குவதற்காக ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களை ஸ்தாபிக்கும் அதிகாரம் இலங்கை முதலீட்டுச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது வரிசை அமைச்சாக அபிவிருத்தி தந்திரோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் இச்செயற்பாட்டிற்கான மேற்பார்வை செயற்பாடு நிறைவேற்றப்படும்.

1978 இன் 04 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை அதிகாரச்சட்டத்தின் கீழ் நேரடி வெளிநாட்டு முதலீட்டினை இலக்காகக் கொண்டு 12 ஏற்றுமதி செயன்முறைப்படுத்தும் வலயங்கள் மேற்கு, தெற்கு, மத்தி மற்றும் வடமேல் மாகாணங்களில் தற்பொழுது ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை ஸ்தாபிப்பதற்காக அடிக்கடி பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2002 ஆம் ஆண்டின் பின்னர் எதுவித முதலீட்டு செயன்முறைப்படுத்தல் வலயமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்காத நிலைமையின் கீழ் தந்திரோபாய ரீதியாக இலக்கிடப்பட்ட பிரிவுகளுக்காக ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களை உருவாக்குவதற்கு 2017 ஆம் ஆண்டில் அரசாங்க பாதீட்டின் மூலம் பிரேரிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அதிவேக வீதிகளின் உச்ச அளவு நலன்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அதிவேக வீதிகளுக்கு அண்மித்த பிரதேசங்களில் தனியார் மற்றும் அரசாங்க முகாமைத்துவத்தின் கீழ் சுதந்திர வர்த்தக வலயங்களைத் தோற்றுவிக்க வேண்டுமெனவும் அரசாங்கத்தினால் காணிகள், மின்சாரம் மற்றும் நீர் வழங்குவதற்கும் அதற்காக ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டது. அவ்வாறே இறப்பரினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், மருந்துகள், ஆடை உற்பத்திகள், பெற்றோலியம், இரசாயனத் திரவியங்கள், வாகனத் தயாரிப்பு ஆகிய கைத்தொழிலை இலக்காகக் கொண்டு களுத்துறை, இரத்தினபுரி, புத்தகளம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் 04 சுதந்திர வர்த்தக நிலையங்களைத் தோற்றுவிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டது. உத்தேசிக்கப்பட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2017 ஆம் ஆண்டிற்கான தேசிய பாதீட்டிலிருந்து ரூபா 1,000 மில்லியன் மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய பாதீட்டிலிருந்து ரூபா 2,500 மில்லியன் நிதிஏற்பாடு வரிசை அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் ரூபா 1,000 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

கைத்தொழில் வலயத்திற்காக காணிகளை இனங்காணல் சம்பந்தமாக பிரதம மந்திரியின் தலைமைத்துவத்திலும் காணிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு உரிய தரப்பினர்களின் தலைமைத்துவத்திலும் 2017 மார்ச் 03 ஆந் திகதி அலரிமாளிகையில் நடாத்தப்பட்ட கூட்டக் குறிப்பின் பிரகாரம் பின்வரும் காணிகள் கைத்தொழில் வலயத்தை தோற்றுவிப்பதற்காக இனங்காணப்பட்டன என்பது அவதானிக்கப்பட்டது.

| காணியின் பெயர் | முழுக் காணியின் பரப்பளவு | காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு |
| --- | --- | --- |
| | (ஏக்கர்) | |
| நிவ் வெடல் வத்த | 1278 | மில்லனிய |
| மில்லேவ வத்த | 591 | ஹொரண |
| சொரண வத்த | 668 | ஹொரண |
| பென்ரின் வத்த | 1597 | சீதாவக |
| எல்ஸ்டன் | 1986 | சீதாவக |
| ஹீன்வெலியகார வத்த | 487 | பிங்கிரிய |
| மடுகஸ்அகார வத்த | 50 | பிங்கிரிய |
| கொவுல்வெ வவத்த | 130 | உடுபத்தாவ |
| கொரொக்கஸ்அகார வத்த | 282 | உடுபத்தாவ |
| ஜேர்மன் வத்த | 100 | உடுபத்தாவ |

இதற்கு மேலதிகமாக வெலிகம பிரதேச செயலகப் பிரிவில் சாலிமொன்ட் தோட்டத்தினையும் ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை ஸ்தாபிப்பதற்காக பயன்படுத்துவது தொடர்பாக 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு பிரேரணையின் மூலம் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இலங்கை முதலீட்டுச் சபை இச்செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் வசதிகளை வழங்குகின்ற நிறுவனமாகவும் வரிசை அமைச்சாகிய அபிவிருத்தி தந்திரோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு நிதியளித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் நிறுவனமாகவும் செயற்பட்டது.

## 2.2 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் எனது ஏற்பாட்டின் கீழ் இச்செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 2.3 கணக்காய்விற்கான தலைப்பினைத் தெரிவு செய்வதற்கான காரணம்

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாட்டிற்கு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தின் தேவைப்பாடு அதிகளவு உருவாகியுள்ள நிலைமையின் கீழ் புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை தோற்றுவிப்பதின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு 2014 ஆம் ஆண்டிலிருந்து புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தும் வலயங்களைத் தோற்றுவிக்கும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அச்செயற்பாடு திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டிருக்காமை கணக்காய்விற்காக இத்தலைப்பினை தெரிவு செய்வதற்கு காரணமாகும்.

## 2.4 கணக்காய்வின் குறிக்கோள்

புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தும் வலயங்களைத் தோற்றுவிப்பது சம்பந்தமாக உரிய நிறுவனங்களின் கடமைகளை மதிப்பீடு செய்தல் கணக்காய்வின் குறிக்கோளாகும். இக்குறிக்கோள் சுருக்கமாக கீழே குறிப்பிட்டவாறாகும்.

(அ) புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களைத் தோற்றுவிப்பதற்காக தொடக்க ஆய்வினை மேற்கொள்ளும் கடமையை மதிப்பீடு செய்தல்.

(ஆ) அரசாங்கத்தின் கொள்கையாக புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களைத் தோற்றுவிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற சட்டங்களின் கீழ் அதிகாரம் ஒப்படைக்கப்படுகின்ற நிறுவனங்களின் கடமைகளை மதிப்பீடு செய்தல்.

(இ) ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் ஏனைய சேவைகளை வழங்கும் செயற்பாடு ஒப்படைக்கப்பட்ட நிறுவனங்களின் கடமைகளை மதிப்பீடு செய்தல்.

## 2.5 செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்கள்

--------------------------------------------------------------------------------

இச்செயற்திட்டத்திற்காக தொடர்புபட்ட நிறுவனங்கள் மற்றும் கடமைகள் பின்வருமாறாகும்.

| | **தொடர்புபட்ட நிறுவனம்** | **கடமைகள்** |
|---|---|---|
| (அ) | அபிவிருத்தி தந்திரோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு | செயற்திட்டம் சம்பந்தமாக நிதியளித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல். |
| (ஆ) | இலங்கை முதலீட்டுச் சபை | செயற்திட்டத்தை அமுல்படுத்தலும் வசதிகளை வழங்குதலும் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை அதிகாரச்சட்டத்தில் குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் கடமைகளை நிறைவேற்றுதல். |
| (இ) | வீதி அபிவிருத்தி அதிகாரச சபை | உத்தேச ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களின் நுழைவு வீதிகளை நிர்மாணித்தல். |
| (ஈ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களுக்குத் தேவையான நீரினை வழங்குதல் மற்றும் அது தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். |
| (உ) | மாகாண அபிவிருத்தி அதிகார சபை / உள்ளுராட்சி நிறுவனம் | நீர்க்குழாய் அமைத்ததன் காரணமாக சேதமடைந்த வீதிகளை மீண்டும் புனரமைத்தல். |
| (ஊ) | சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் | புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்கள் சம்பந்தமாக சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்தல். |

## 2.6 உபகுறிக்கோள்களும் வரையறைகளும்

| உப கணக்காய்வு குறிக்கோள் | வரையறைகள் |
|---|---|
| (அ) காணிகளைச் சுவீகரிக்கும் செயற்திறன், வினைத்திறன் மற்றும் சிக்கனத் தன்மையை மதிப்பீடு செய்தல். | காணிகளைச் சுவீகரிப்பதனைத் திட்டம், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய பாதீட்டு பிரேரணை, அமைச்சரவைத் தீர்மானம் வெளித்தரப்பினர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகள் மற்றும் நீதிமன்ற பணிப்புரைகள் |
| (ஆ) பெருந்தெருக்களை நிர்மாணிப்பதின் செயற்திறன் விளைதிறன் மற்றும் சிக்கனத் தன்மையை மதிப்பீடு செய்தல். | பெருந்தெருக்களை நிர்மாணிக்கும் திட்டம். |
| (இ) மின்சார மற்றும் நீர் வழங்கலின் செயற்திறன், விளைதிறன் மற்றும் சிக்கனத் தன்மையை மதிப்பீடு செய்தல். | மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் திட்டமிடல். |
| (ஈ) இடம்பெயர்ந்த குடும்பங்களை மீண்டும் குடியமர்த்துதலின் செயற்திறன், விளைதிறன் மற்றும் சிக்கனத் தன்மையை மதிப்பீடு செய்தல். | இடம்பெயர்ந்த குடும்பங்களை மீண்டும் குடியமர்த்தும் திட்டம். |
| (உ) சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்தலினதும் சுற்றாடல் நியமங்களை கடைப் பிடிப்பதின் | கழிவு நீர் வெளியேற்றுதல் திட்டம் மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் |

செயற்திறன் மற்றும் அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் விளைதிறனை மதிப்பீடு செய்தல்.

## 2.7 கணக்காய்வு அணுகுமுறை

### (அ) ஏடுகள் மற்றும் ஆவணங்களைப் பயன்படுத்துதல்

இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் அபிவிருத்தி தந்திரோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் பேணப்படுகின்ற

I. செயற்திட்டம் தொடர்பான கோவைகள்

II. செயல்முன்னேற்ற அறிக்கை

III. கொடுப்பனவுகளுக்குரிய ஆவணங்களும், கணக்குகளும்

### (ஆ) உரிய தரப்பினர்களுடனான கலந்துரையாடல்கள்

I. இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகத்தர்கள்

II. அபிவிருத்தி தந்திரோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் உத்தியோகத்தர்கள்

III. மில்லனிய பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள்

IV. பிங்கிரிய ஏற்றுமதி செயற்பாட்டு வலய அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள்

V. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள்

### (இ) பௌதீக பரிசோதனைகள்

I. மில்லனிய ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை

II. பிங்கிரிய ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை

**(ஈ) எதிர்ப்புக்களைத் தெரிவிக்கும் நபர்களின் கருத்துரைகளும் பிரேரணைகளும்**

I. மில்லனிய ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தை தோற்றுவிப்பது சம்பந்தமாக எதிர்ப்புக்களைத் தெரிவிக்கும் நபர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்கள்

II. அந்த எதிர்ப்புக்கள் சம்பந்தமாக பேணப்படுகின்ற புலனாய்வு அறிக்கைகள்

## 2.8 கணக்காய்வின் நோக்கெல்லை

(அ) எங்களின் செயலாற்றல் கணக்காய்வானது கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான மீயுயர் நிறுவனங்களின் சர்வதேச அமைப்பினால் (இன்டோசாய்) வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. எங்களின் செயலாற்றல் கணக்காய்வின் அவதானிப்புக்கள் மற்றும் சிபார்சுகளின் அடிப்படையில் முடிவுரைக்கு வருவதற்காக குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை எவ்வளவுக்கு அடைந்துகொள்ளலாம் அக்குறிக்கோள்களை அடைந்து கொள்ளல் சம்பந்தமான அச்சுறுத்தல்கள் என்ன என்பதை தீர்மானிப்பதற்கான ஒரு அடிப்படையாக நிறுவனம் அதனது செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் தொடர்பாக எங்களால் விளக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

(ஆ) எங்களின் செயற்பாடுகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டு கணக்காய்வுத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. செயலாற்றல் கணக்காய்வினை மேற்கொள்கின்ற வேளையில் எங்களின் கண்டுபிடிப்புக்களின் விளைவுகளின் அடிப்படையில் இது மாற்றமடையலாம். அதற்கிணங்க எங்களால் கணக்காய்வின் நோக்கெல்லையை திருத்தம் செய்தல் மற்றும் கணக்காய்விற்காக காணப்படுகின்ற காலம் மற்றும் மனித வளங்களின் அடிப்படையில் செயலாற்றல் கணக்காய்வின் அளவானது தெரிவுச் செவ்வை நடைமுறைகளுக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது.

(இ) இச்செயலாற்றல் கணக்காய்வானது இலங்கை முதலீட்டுச் சபை அபிவிருத்தி தந்திரோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுடன் இணைந்து ஸ்தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்ட மில்லினிய மற்றும் பிங்கிரிய ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்கள் சம்பந்தமாக மாத்திரம் கவனம் செலுத்தி மேற்கொள்ளப்பட்டது.

## 3. விபரமான கணக்காய்வு அவதானிப்புக்களும் சிபார்சுகளும்

### 3.1 ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களைத் தோற்றுவிப்பது சம்பந்தமாக இலங்கை முதலீட்டுச் சபையின் அடிப்படைத் திட்டங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் நடைமுறை

#### 3.1.1 திட்டமிடல்

இலங்கை முதலீட்டுச் சபையின் 2014 – 2016 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டளவில் 02 புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்கள் மற்றும் 2017 – 2020 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டளவில் 06 புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களை ஸ்தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிங்கிரிய மற்றும் மில்லனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களை மாத்திரம் ஸ்தாபிக்கும் வேலைகள் இடம்பெற்று வந்தன. அதற்கிணங்க புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களை ஸ்தாபித்தல் சம்பந்தமாகத் திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது.

#### 3.1.2 புதிய முதலீட்டு வலயங்களைத் தோற்றுவிப்பது சம்பந்தமான முன் ஆய்வுகள்

புதிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களைத் தோற்றுவிப்பது சம்பந்தமாக பின்வரும் சாத்தியவள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

(i) இலங்கை முதலீட்டுச் சபையின் “லேன்ட் டீம்” பெயருள்ள ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்திற்காக பொருத்தமான காணியை இனங்காணும் குழுவினால் ஹவாட் பல்கலைக்கழகத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான நிறுவனத்தின் (Center to International Development) ஆலோசனையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட புதிய கைத்தொழில் வலய அபிவிருத்திக்காக சாத்தியமான ஒரு இடத்தை இனங்காணல் (Identification of Potential sites for the Development of New Industrial zones) என்ற பெயரிலான சாத்தியவள ஆய்வு

இந்த ஆய்வு அறிக்கை 2017 யூன் மாதத்தின் போது வழங்கப்பட்டதுடன் புத்தளம், களுத்துறை, ஹொரன, கொழும்பு, குருணாகல், மாத்தறை ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள 14 காணிகள் சம்பந்தமாக புதிய கைத்தொழில் வலயங்களைத் தோற்றுவிக்கும் சாத்தியம் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது.

மில்லனிய பிரதேசத்தில் 244 ஏக்கர்கள் அளவான வெடல்வத்த சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது நிலப்பகுதி, அபிவிருத்தி செய்யக் கூடியதான இயலுமை போன்ற நிலப் பண்புகள், பிரதான நகரத்திலிருந்து தூரம் பிரதான வீதிக்கு உள்ள தூரம், பிரதான அதிவேக வீதிக்கு உள்ள தூரம், துறைமுகத்திற்கு / புகையிரத வீதிக்கு / விமான நிலையத்திற்கு உள்ள தூரம் என்ற பிரதான போக்குவரத்து வழிகளுக்கான நுழைவு மற்றும் மின்சாரம், தொலைபேசி, நீர், நுழைவு வீதி, வெளிப்பாதை, வெளிக்கழிவு நீரை அகற்றும் வசதிகள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. ஆய்வின் மூலம் இக்காணியை ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை நிர்மாணிப்பதற்கு பொருத்தமானது என்பது மேலும் சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

**II. ஏனஸ்ட் மற்றும் யங் சின்னிஹொான் எல்.எல்.சீ கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள ஆய்வு**

---

2018 மே மாதத்தின் போது வழங்கப்பட்ட இச்சாத்திய வள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் மில்லனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களை நிரமாணிப்பதற்கு உத்தேச பிரதேசம் இறப்பர் பயிர்ச்செய்கையுடனான ஒரு காணி எனவும் துணை வசதிகள் தற்பொழுது அரசாங்கத்தினால் வழங்குவதற்கு ஆயத்தம் எனவும் 50 விவசாய குடும்பங்கள் உத்தேச காணியில் குடியிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இக்காணியை கைத்தொழில் வலயமாக அபிவிருத்தி செய்யலாம். அதாவது "A" தரத்திலுள்ள வேலைத்தளமாக தரப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்கத்தின் இறப்பர் கொள்கையின் கீழ் 53 ஆண்டுகள் காலத்திற்கான குத்தகை உடன்படிக்கையின் கீழ் தற்பொழுது நடாத்தப்பட்டு வருகின்ற இறப்பர் பயிர்ச் செய்கையுடனான பயிர்ச்செய்கை சம்பந்தப்பட்ட 50 விவசாயக் குடும்பங்கள் குடியிருக்கும் இக்காணியை செயற்திறனாக சுவீகரிக்கும் இயலுமை சம்பந்தமாக இந்த இரண்டு சாத்திய வள அறிக்கையின் மூலம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், குத்தகைதாரான ஹொரண பெருந்தோட்டக் கம்பனியால் உரிய காணியைச் சுவீகரிப்பதற்கு எதிராக எடுக்கப்பட்ட நீதிமன்ற நடைமுறைகளின் காரணமாக செயற்திட்டத்தை கைவிட நேரிட்டது.

இதன் காரணமாக எதிர்காலத்தில் ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயம் சம்பந்தமாக காணிகளைச் சுவீகரிக்கும் போது முகங்கொடுப்பதற்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் ஆபத்துக்கள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய நிலைமை காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.1.3 ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களை ஸ்தாபிக்கும் பிரேரணையும் அங்கீகாரமும்

---

(அ) 2017 ஆம் அண்டிற்கான பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் களுத்துரை பிரதேசத்தில் மில்லேனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை ஸ்தாபிப்பதற்கான ஒரு பிரதேசம் என்பதாக பிரேரிக்கப்பட்டது. அதற்கிணங்க 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதி பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை உப குழுவின் அங்கீகாரத்துடன் 2017 திசெம்பர் 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் 2018 சனவரி மாதம் 10 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த வெளியார் / தனியார் நிறுவனத்துடனான ஒத்துழைப்புடன் ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயம் / கைத்தொழில் வலயமாக அபிவிருத்தி செய்ளக்கூடிய வகையில் அதிவேகப் பாதை, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு அண்மையில் அமைந்துள்ளவற்றிற்கு நேரொத்த வகையில் இலகுவாக சுவீகரிக்கப்படக்கூடிய பொருத்தமான காணிகள் மற்றும் இடங்கள் இலங்கை முதலீட்டுச் சபையின் மூலம் இனங்காணப்படுதல் வேண்டும்.

(ஆ) அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் கூட்டுமுயற்சியின் மூலம் வலயம் / பூங்காவை அபிவிருத்தி செய்தல், தேசிய பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிஏற்பாட்டின் மூலம் வலயங்கள் / பூங்காக்களுக்கு வெளியே அமைந்துள்ள உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் வீதி வலையமைப்பினையும் துணைச் சேவைகளையும் வழங்குதல், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் வசதிகளை வழங்கும் பொறுப்பு இலங்கை முதலீட்டுச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டது. வலயத்தை அமுல்படுத்தும் அதிகாரம் சம்பந்தமாக கூட்டு முயற்சியுடனான சட்டரீதியான உடன்படிக்கையில் முதலீட்டுச் சபை உள்ளடக்கப்படுதல் வேண்டும். அதற்கிணங்க தனியார் துறையின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற பூங்கா / வலயத்தை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள தாய்லாந்துக் கம்பனியான வரையறுக்கப்பட்ட ரோஜனா இன்டஸ்ட்ரியல் பாக் கம்பனியால் இணக்கம் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் வலய முகாமையாளர் அல்லது ஏனைய சேவைகளை வழங்குனராக வரையறுக்கப்பட்ட ரோஜனா இன்டஸ்ட்ரியல் பார்க்

கம்பனிக்கும் இலங்கை முதலீட்டுச் சபைக்குமிடையே ஒன்றித்த விருப்பத்தை தெரிவிக்கும் கடிதம் (Letter of Intent) 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டது. எவ்வாறாயினும் எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்குள் காணி விடுவிக்கப்படாமையும் ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயம் வரையான உட்கட்டமைப்பு வசதிகள் அப்போது வரை ஆயத்தமாக காணப்படாமையும் காரணமாக இந்த இணக்கப்பாடு பின்னர் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) பிங்கிரிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை ஸ்தாபிப்பது தொடர்பான பிரேரணையானது பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை தெரிவுக் குழுவினால் 2017 நவம்பர் 08 ஆந் திகதி நடைபெற்ற குழுக் கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டதுடன் அதற்காக 2017 திசெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. இதன் கீழ் பிங்கிரிய உடுபத்தாவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஜேர்மன் தோட்டத்தில் 164 ஏக்கர்கள் முதலாம் கட்டத்தின் கீழும் கொரககஸ் தோட்டத்தின் 283 ஏக்கர்கள் இரண்டாம் கட்டத்தின் கீழும் ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களைத் தோற்றுவிப்பதற்காகச் சுவீகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

## 3.2 செயற்திட்டத்தின் செயற்திறன்

--------------------------------------------------

மில்லேனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தின் நடவடிக்கைகளுக்காக 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு பிரேரணையின் கீழ் ரூபா 1,000 மில்லியன் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அது வரிசை அமைச்சான அபிவிருத்தி தந்திரோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சிற்கு கிடைத்திருந்தது. உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2017 செப்தெம்பர் மாதத்திலிருந்து கொடுப்பனவு செய்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் இந்த அனைத்து செயற்திட்டங்கள் சம்பந்தமாகவும் முறையான செயற்திட்டமும் (Project Plan) கொடுப்பனவுத் திட்டமும் (Payment Plan) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அதற்கு ஓராண்டின் பின்னர் அதாவது 2018 செப்தெம்பர் 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் மில்லனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்திற்குரிய கிரய நலன் பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| காணியின் பரப்பளவு (கட்டம் I மற்றும் II) | 400 ஏக்கர் |
| தொழில்நுட்ப காணியின் அளவு | 240 ஏக்கர் |
| உட்கட்டமைப்பு வசதிகளுக்கான (வெளி) செலவுக் கிரயம் | ரூபா 8,366 மில்லியன் |
| உள்ளக உட்கட்டமைப்பு வசதிக் கிரயம் | ரூபா 2,745 மில்லியன் |
| முதற்கொடுப்பனவுகள் வரி தவணைப் பணம் | அமெரிக்க டொலர் 60,000 |
| குத்தகை – ஒரு ஏக்கருக்கு | அமெரிக்க டொலர் 4,660 |
| வைப்பு விகிதம் | 8.75 சதவீதம் |
| கழிவுக் காரணி (மத்திய வங்கியினால் கணிக்கப்பட்ட விகிதம்) | 9 சதவீதம் |
| மீளச் செலுத்தும் காலம் | 14 ஆண்டுகளின் பின்னர் |

அந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் இச்செயற்திட்டத்திற்காக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது தொடர்பான விபரம் கீழே குறிப்பிட்டவாறாகும்.

| செலவு விபரம் | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்தப்பட்ட பணம் | 2018 | 2019 | 2020 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | (ரூபா. மில்லியன்) | (ரூபா. மில்லியன்) | (ரூபா. மில்லியன்) | (ரூபா. மில்லியன்) | (ரூபா. மில்லியன்) |
| உள்ளக இடமாறல்கள் மற்றும் நுழைவு வீதிகள் - வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 80 | 900 | 2,170 | 4,338 | 7,488 |
| நீர் வழங்கல் - தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | 298 | 545 | 307 | 100 | 1,250 |
| மின்சாரம் வழங்கல் - இலங்கை மின்சார சபை | 102 | 832 | 896 | 1,190 | 3,020 |
| காணிகளைச் சுவீகரித்தல் - பிரதேச செயலகம், மில்லனிய | 91 | 275 | - | 1,000 | 1,366 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கழிவுநீரை வெளியேற்றும் முறைமை – தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | - | - | 50 | 200 | 250 |
| நீர்க் குழாய்களை அமைப்பதன் காரணமாக வீதிகளைப் புனரமைத்தல் - மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை / உள்ளூராட்சி நிறுவனம் | 53 | 10 | 27 | 10 | 100 |
| மொத்தம் | 624 | 2,562 | 3,450 | 6,838 | 13,474 |

2018 ஒக்தோபர் 03 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் பிங்கிரிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை தாபிக்கும் போது காணிகளைச் சுவீகரித்தல், மின்சாரம் வழங்குதல், நீர் வழங்குதல், நுழைவு வீதிகளை மேம்படுத்துதல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் தொடர்பாக விபரமான கிரயப் பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| **தொடக்க வேலைகள்** | **2018** (ரூபா. மில்லியன்) | **2019** (ரூபா. மில்லியன்) | **2020** (ரூபா. மில்லியன்) | **மொத்தம்** (ரூபா. மில்லியன்) |
|---|---|---|---|---|
| காணிகளைச் சுவீகரித்தல் | 105 | 175 | - | 280 |
| நுழைவு வீதிகளை நிர்மாணித்தல் | | | | |
| ஜே.ஆர்.சந்தியிலிருந்து ஹெட்டியாகொடுவ சந்தி வரை | 298 | - | - | 298 |
| ஜே.ஆர்.சந்தியிலிருந்து நுன்தொட வரை | - | 220 | - | 220 |
| ஹெட்டியாதொடுவ சந்தியிலிருந்து சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிகள் சபை வரை | - | - | 902 | 902 |
| நீர் வழங்கல் | | | | |
| சிலாபம் நீர் வழங்கல் செயற்திட்டத்தின் 1000$m^3$ அளவான தொடக்க நீர் வழங்கல் | 79.9 | 319 | - | 403 |

| | | | | |
|---|---|---|---|---|
| மின்சார வழங்கல் | | | | |
| ---------------------------- | | | | |
| மாதம்பை மின் உப நிலையத்திலிருந்து 2 MVA தொடக்க மின் வழங்கல் | 7.46 | - | - | 7.46 |
| 8 MVA நிரந்தர மின் வழங்கல் | - | - | 150 | 150 |
| நானாவிதம் | | | | |
| ------------------ | | | | |
| சமச்சீர்த் தன்மையை அளத்தல் | 1.7 | - | - | 1.7 |
| மண் புலனாய்வு நடவடிக்கை | 3.58 | - | - | 3.58 |
| | -------- | -------- | -------- | -------- |
| | 500 | 714 | 1052 | 2266 |
| | ==== | ==== | ==== | ==== |

ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை தோற்றுவிக்கும் செயற்திட்டத்தின் செயற்திறன் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.2.1 காணிச் சுவீகரிப்பு

------------------------------

2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதி நடைபெற்ற பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை உப குழுவினால் மில்லனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை தோற்றுவிப்பதற்காக புதிய செடல் தோட்டம் கட்டம் I ஆக இனங்காணப்பட்ட 244 ஏக்கர்களைக் கொண்ட காணியை இலங்கை முதலீட்டுச் சபைக்கு விரைவாக ஒப்படைப்பதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது. சுவீகரிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட இக்காணிக்குரியதான 2228 ஏக்கர்களைக் கொண்ட மில்லனிய புதிய செடல் தோட்டம் காணி மறுசீரமைப்புக் குழுவிற்குச் சொந்தமானதாக உள்ளதுடன் அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு குத்ததைகக்கு வழங்கப்பட்டு அவர்களினால் 1995 ஆம் ஆண்டின் போது ஹொரன பெருந்தோட்டக் கம்பனிக்கு உப குத்தகையின் கீழ் 53 ஆண்டுகள் காலப்பகுதிக்கு வழங்கப்பட்டிருந்தது.

காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 2 ஆவது பிரிவின் பிரகாரம் பொதுத் தேவைப்பாடுகளுக்காக காணிகளைச் சுவீகரிப்பதற்கான அறிவித்தல் வழங்கப்பட்டதுடன் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் பகிரங்கப்படுத்தப்பட்ட 2018 யூலை 25 ஆந் திகதிய அறிவித்தலின் பிரகாரம் அபிவிருத்தி தந்திரோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளருக்கு 10 தரப்பினர்களால் எதிர்ப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி தந்திரோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட புலனாய்வு உத்தியோகத்தரினால் 2018 ஒக்தோபர் 04 ஆந் திகதி மில்லனிய பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் பிரகாரம் இதன் பிரதான எதிர்ப்பாளரான ஹொரன பெருந்தோட்ட தனியார் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்களுக்கு மத்தியில் பிரதான எதிர்ப்புக்கள் கீழே குறிப்பிட்டவாறாகும்.

(அ) கம்பனிக்கு 53 ஆண்டுகள் பயன்படுத்துவதற்கு காணியை வழங்குவதற்காக எடுத்த தீர்மானத்திற்கு இப்பொறுப்பேற்றல் எதிரானது என்பது.

(ஆ) அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் இத்தோட்டம் தனியார் துறைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டதானது அப்போது நட்டமடைந்து காணப்பட்டதனால் அத்தோட்டத்தை இலாபம் பெறும் நிலைக்கு மாற்றுவதனைப் போல தொழில்வாய்ப்புக்கள் போன்ற ஏனைய பொருளாதார நலன்களை வழங்குவதற்கு கம்பனிக்கு முடியும் என்பது.

(இ) கம்பனியால் இத்தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 500 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பது.

(ஈ) இத்தோட்டத்தின் மூலம் 300 தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதுவும் முழுமையாக 2320 நபர்கள் இத்தோட்டத்தில் வாழ்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளது என்பதுவும்

(உ) இத்தோட்டத்தை பெற்றுக்கொண்ட சமயத்திலிருந்து இன்றுவரை 160,000 இறப்பர் மரங்கள் மீளப்பயிரிடப்பட்டுள்ளன என்பதுவும்,

(ஊ) இத்தோட்டத்திலிருந்து கிடைக்கின்ற வருடாந்த வருமானம் சராசரியாக ரூபா 83 மில்லியன் என்பதுவும்

(எ) கிரேப் இறப்பர் தயாரிப்பதற்காக ரூபா 45.43 மில்லியன் செலவு செய்யப்பட்டு தொழிற்சாலை புனரமைப்புச் செய்யப்பட்டது என்பதுவும்

(ஏ) இத்தோட்டத்தில் ரூபா 94.72 மில்லியன் செலவு செய்யப்பட்டு ஒயில் பாம் பயிரிடப்பட்டுள்ளதுடன் அப்பயிர்கள் தற்பொழுது விளைச்சல் தருகின்றன என்பதுவும்.

(ஐ) இச்சுவீகரிப்பு நிர்ணயிக்கப்பட்ட காணிகள் அதிகளவு விளைச்சலைக் கொண்ட காணி என்பதுவும் இத்தோட்டம் அமைந்துள்ள பிரதேசம் இறப்பர் பயிர்ச்செய்கைக்கு மிகவும் பொருத்தமான பிரதேசம் என்பதுடன் உயர் தரத்திலான கிரேப் இறப்பர் இங்கே உற்பத்தி செய்யப்படுவதுடன் அதற்காக ஏல விற்பனைகளில் அதிக விலையைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுவுமாகும்.

எவ்வாறாயினும், மேற்கூறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஹொரண பெருந்தோட்ட தனியார் கம்பனியால் 2019 மே 07 ஆந் திகதி CA (writ) 115/2019 ஆம் இலக்கத்தின் கீழ் மில்லனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை தோற்றுவிப்பதற்காக உத்தேச காணியை அரசாங்கத்தினால் சுவீகரிப்பதற்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுடன் 2019 செப்தெம்பர் 19 ஆந் திகதி நீதிமன்றத்தினால் அது சம்பந்தமாக நிறுத்தல் கட்டளை (Stay Order) வழங்கப்பட்டதுடன் அதனை 2020 யூலை 31 ஆந் திகதி வரை நீடிப்பதற்கு பணிப்புரை விடுவிக்கப்பட்டுள்ளது.

2017 நவம்பர் 02 ஆந் திகதிய அரசாங்கத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் சுவீகரிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 366,000,000 ஆக உள்ளதுடன் அதில் 25 சதவீதமான ரூபா 91,500,000 பணம் காணிச் சுவீகரிப்பு வைப்பாக அபிவிருத்தி தந்திரோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் மில்லனிய பிரதேச செயலகத்திற்கு 2017 நவம்பர் 29 ஆந் திகதி செலுத்தப்பட்டது.

காணிச் சுவீகரிப்பு செயற்பாட்டினை 2018 ஆம் ஆண்டளவில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய தோட்டக் கம்பனியால் எடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கையின் காரணமாக 2020 ஆம் ஆண்டில் அக்காணிச் சுவீகரிப்பு நடவடிக்கையை முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தது. எவ்வாறாயினும், காணிகளைச் சுவீகரிப்பதற்கு முன்னர் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,988,918,307 பணம் அமைச்சினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, இலங்கை மின்சார சபை ஆகிய நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்டது.

### 3.2.2 பெருந்தெருக்களை நிர்மாணித்தல்

----------------------------------------------------------

(அ) மில்லனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்திற்கான நுழைவு வீதியாக பெல்பொல உள்ளக இடமாறலும் அது தொடர்பான நுழைவு வீதியையும் வகவத்த ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் நிலையத்திற்கான நுழைவு வீதியையும் நிர்மாணிப்பதற்காக ரூபா 3,900 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினை செலவு செய்வதற்கும் அந்நடவடிக்கையை 2020 ஆம் ஆண்டளவில் முடிவுறுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 80 மில்லியனும், 2019 ஆம் ஆண்டில் ரூபா 125 மில்லியனுமாக ரூபா 205 மில்லியன் பணம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டது. 2019 நவம்பர் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனையின் பிரகாரம் பொல்பொல உள்ளக இடமாறலினை நிர்மாணித்தல் மற்றும் நுழைவு வீதிகள் சம்பந்தமான நிர்மாணிப்புக்கள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

ஹொரண பெருந்தோட்டக் கம்பனியால் எடுக்கப்பட்டுள்ள நீதிமன்ற நடவடிக்கைகளின் விளைவாக 2020 யூலை மாதம் வரை வேலைகளை நிறுத்துவதற்கான நிலையியல் கட்டளை (Stay Order) வழங்கியதன் காரணமாக செயற்திட்டத்தின் மேலதிக நடவடிக்கைகளை நிறுத்துமாறு அபிவிருத்தி தந்திரோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு 2019 ஒக்தோபர் 16 ஆந் திகதி தெரிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இலங்கை முதலீட்டுச் சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் பெல்பொல உள்ளக இடமாற்றலினையும் நுழைவு வீதியினையும் நிர்மாணிக்கும் நடவடிக்கைகளில் 60 சதவீதத்தினை முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தகவல்களின் பிரகாரம் 2020 யூலை 10 ஆந் திகதியில் உள்ளவாறு செயற்திட்டத்திற்குரிய வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் கீழே குறிப்பிட்டவாறாகும்.

| செயற்பாடு | செயல் முன்னேற்றம் (%) |
|---|---|
| பெல்பொல உள்ளக இடமாறலை நிர்மாணித்தல் | 19 |
| மில்லனியவிலிருந்து பெல்பொல வரையான 4 நிரல்களைக் கொண்ட நுழைவு வீதி | 2 |
| ஹொரண வகவத்த வீதி | 37 |
| ஒட்டுமொத்த செயல்முன்னேற்றம் | 19 |

(ஆ) பிங்கிரிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை தோற்றுவிப்பதற்கான விபரமான பகுப்பாய்வின் பிரகாரம் 03 நுழைவு வீதிகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் இவ்வீதிகளை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 298 மில்லியன், 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 220 மில்லியன் மற்றும் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 902 மில்லியன் செலவு செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டின் போது ஜே.ஆர்.சந்தியிலிருந்து ஹெட்டியாகொடுவ சந்தி வரையான நுழைவு வீதியினை நிர்மாணித்து முடிவுறுத்த வேண்டியதுடன் 2019 ஆம் ஆண்டின் போது துன்தொடவிலிருந்து ஜே.ஆர் சந்தி வரையான வீதி நிர்மாணித்து முடிவுறுத்தப்படல் வேண்டும். அதற்கிணங்க, அமைச்சினால் நுழைவு வீதியினை அபிவிருத்தி செய்வதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 350 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 100 மில்லியன் தொடக்க அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் ரூபா 200 மில்லியன் துன்தொடவிலிருந்து ஜே.ஆர்.சந்தி வரையான வீதிக்காகவும், ரூபா 50 மில்லியன் ஜே.ஆர்.சந்தியிலிருந்து ஹெட்டியாகொடுவ வரையுமான வீதிக்காகவும் செலவு செய்யப்பட்டிருந்தது.

திட்டத்தின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது ஜே.ஆர்.சந்தியிலிருந்து ஹெட்டியாகொடுவ சந்தி வரையான நுழைவு வீதி நிர்மாணித்து முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும், உரிய நுழைவு வீதியை நிர்மாணித்தல் சம்பந்தமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்ட செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2020 யூலை 15 ஆந் திகதியில் உள்ளவாறு அதன் செயல்முன்னேற்றம் 58 சதவீதமாகும். அவ்வாறே 2019 ஆம் ஆண்டின் போது நிர்ணயித்து முடிவுறுத்தப்பட வேண்டிய துன்தொடவிலிருந்து ஜே.ஆர்.சந்தி வரையான வீதியை நிர்மாணிப்பதின் செயல்முன்னேற்றம் 7.6 சதவீதமாகும்.

இவை சம்பந்தமாக 2020 நவம்பர் 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசீலனையின் போது கீழே குறிப்பிட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இவ்வீதிச் செயற்திட்டம் சம்பந்தமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட அளவீட்டுப் பட்டியல் 2019 நவம்பர் 26 ஆந் திகதி வரையும் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளரின் எழுத்துமூல கூற்றின் பிரகாரம் 2019 ஏப்ரல் மாதம் 25 ஆந் திகதி அபிவிருத்தி தந்திரோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக பிரதி அமைச்சர், இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர், மற்றும் பணிப்பாளர் நாயகத்தனால் வழங்கப்பட்ட எழுத்துமூல ஆலோசனையின் அடிப்படையில் துன்தொட ஜே.ஆர்.சந்தி வரையான வீதிச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 யூன் 30 ஆந் திகதி வரையும் அளவீட்டுப் பட்டியல் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்டத்திற்காக இலங்கை முதலீட்டுச் சபைக்குப் பொறுப்பான பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவரினால் செயற்திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது சம்பந்தமான செயலாற்றல் வாராந்தம் இலங்கை முதலீட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், பணிப்பாளரினால் உரிய செயலாற்றல் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக பதிலளிக்கப்படாததன் காரணமாக உரிய செயலாற்றல் அறிக்கை வழங்கப்பட்டிருக்காததனால் அது சம்பந்தமான தகவல்களை கணக்காய்வில் வெளிப்படுத்த முடியாதிருந்தது.

(iii) அனைத்து நிர்மாணங்களும் முடிவுறுத்தப்படுகையில் ரூபா 30 மில்லியனுக்கு அண்மித்த தொகையை செலவு செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட ஜே.ஆர்.சந்திக்கும் வதுவத்தைக்கும் இடையிலான வீதியில் 24+786 ஆம் இலக்க மதகுவினை நிர்மாணிக்கும் நடவடிக்கை 50 சதவீதம் அளவில் தற்பொழுது முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 1,437,242 செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இம்மதகு நிர்ணயிக்கப்பட்ட உயரத்தினை விட அதிக உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக வயல்களின் நீர் அதனூடாக பாய்வதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதற்கான பதிலாக

தும்மலசூரிய கமநல சேவைகள் நிலையத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் மதகிற்கு கீழே ஹியூம் குழாய்கள் அமைக்கப்பட்டிருந்ததுடன் முறையாகத் திட்டமிடப்படாமையும் நிர்மாண வேலைகளின் மேற்பார்வையில் காணப்பட்ட பலவீனங்களும் இதற்கு காரணமாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(iv) ஜே.ஆர்.சந்தியிலிருந்து ஹெட்டியாகொடுவ வரையான வீதி தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் தயாரிக்கப்பட்ட அளவீட்டுப் பட்டியலின் பிரகாரம் கல் பரப்புதல் (Aggregate Base Code – ABC) 250 மில்லி லீற்றர் தடிப்பில் இருக்க வேண்டிய போதிலும், கி.மீற்றர் 1+000 மற்றும் கி.மீற்றர் 0+950 ஆகிய இடங்களில் அப்பரப்புதல் முறையே 190 மில்லி லீற்றர் மற்றும் 200 மில்லி லீற்றர் தடிப்பினைக் கொண்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(v) வடமேல் மாகாணத்திற்குரிய துன்தொடவிலிருந்து ஜே.ஆர்.சந்தி வரையும் ஜே.ஆர்.சந்தியிலிருந்து ஹொட்டியாகொடுவ சந்தி வரையுமான வீதிகளில் நிர்மாண நடவடிக்கைகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்காக மேல்மாகாண விலை விதிதங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 60 கிலோ மீற்றர் தூரத்திலிருந்து போக்குவரத்துச் செய்வதற்கான விலை விகிதங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இவ்வளவு தூரத்திலிருந்து மண்ணை எடுத்துச் செல்லல் நடைமுறைச் சாத்தியமில்லாமை மற்றும் சிக்கனத்தன்மை இல்லாமையின் காரணமாக 10 கிலோ மீற்றர் தூரத்திலிருந்து எடுத்துச் செல்லும் போது செலவு செய்ய வேண்டிய கிரயத்தை கவனத்தில் கொண்டு மற்றும் மேல் மாகாணத்திற்குரிய விலை விகிதங்களை ஈடுபடுத்தி செயற்திட்ட பணிப்பாளரினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டிற்குமிடையே ரூபா 1,327,670,506 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு | செயற்திட்ட பணிப்பாளரின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| துன்தொடவிலிருந்து ஜே.ஆர்.சந்தி வரை 0+000 – 1+200 KM | 474,335,503 | 223,926,059 | 250,409,444 |
| ஜே.ஆர்.சந்தியிலிருந்து ஹெட்டியாகொடுவ 0+000 – 4+850 KM | 2,081,674,568 | 1,004,413,506 | 1,077,261,062 |
| | 2,556,010,071 | 1,228,339,565 | 1,327,670,506 |

எவ்வாறாயினும், இது சம்பந்தமாக 2020 யூன் 30 ஆந் திகதி வரை இலங்கை முதலீட்டுச் சபை அல்லது அபிவிருத்தி தந்திரோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை.

(இ) இச்செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2019 ஆகஸ்ட் 05, 2019 ஒக்தோபர் 03, மற்றும் 2019 ஒக்தோபர் 11 ஆந் திகதிகளில் முறையே ரூபா 203,875,732 ரூபா 45,019,629 மற்றும் ரூபா 16,597,780 பெறுமதியான 03 இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்கள் (Interim Payment Certificate) சமர்ப்பிக்கப்பட்டன. எவ்வாறாயினும், மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்நிர்மாணங்கள் சம்பந்தமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மேலே குறிப்பிட்ட இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களில் குறிப்பிட்ட விலை விகிதங்கள் மேல் மாகாணத்திற்குரிய விலை விகிதங்களாக இருந்ததன் காரணமாக ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களின் நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்ட பணிப்பாளரினால் அக்கொடுப்பனவு சான்றிதழ்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, மேலே குறிப்பிட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட அளவீட்டுப் பட்டியலும் எழுத்துமூல உடன்படிக்கையும் இன்றி அதற்குரிய விலைப்பட்டியல்களை அங்கீகரிக்க முடியாது என அப்பணிப்பாளரினா் 2019 நவம்பர் 08 ஆந் திகதி அபிவிருத்தி தந்திரோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளருக்கான பிரதியுடன் இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்பணிப்பாளர் மேலும், தெரிவித்தவாறு வீதி அபிவிரத்தி அதிகாரசபை தயாரித்த இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்களில் குறிப்பிட்ட நிர்மாணங்களின் பெறுமதிக்கும் தொடர்புடைய சரியான விலை

விகிதங்களை பயன்படுத்தி அந்நிர்மாணங்கள் சம்பந்தமாக பணிப்பாளர் மேற்கொண்டு கணிப்பீட்டிற்கும் இடையே ரூபா 156,513,806 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| | **வீதி அபிவிருத்தி அதிகார சபை தயாரித்த இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களின் பிரகாரம் பெறுமதி (வரி இல்லாது)** | **செயற்திட்டத்திற்குப் பொறுப்பான பணிப்பாளரின் கணிப்பீட்டின் பிரகாரம் பெறுமதி** | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| IPC 01 | 193,041,756 | 69,464,533 | 123,577,223 |
| IPC 02 | 38,464,897 | 14,913,907 | 23,550,990 |
| IPC 03 | 14,181,190 | 4,795,597 | 9,385,593 |
| | 245,687,843 | 89,173,037 | 156,513,806 |

### 3.2.3 நீர் வழங்கல்

(அ) மில்லனிய ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்திற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மூலம் நீர் வழங்கல் நடவடிக்கையினை 2020 ஆம் ஆண்டளவில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா 1,250 மில்லியனாகும். எவ்வாறாயினும், காணிகளைச் சுவீகரிக்கும் சிக்கலின் காரணமாக மேலதிக நடவடிக்கைகளை கைவிடுமாறு வரிசை அமைச்சினால் 2019 பெப்ரவரி 25 ஆந் திகதி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இலங்கை முதலீட்டுச் சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் நீர் வழங்கலில் 50 சதவீத செயல் முன்னேற்றம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அறிக்கைகளின் பிரகாரம் $500m^3$/day நீர் வழங்கல் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் $10,000m^3$/day நீர் வழங்கல் நடவடிக்கையானது வரிசை அமைச்சின் தெரியப்படுத்தலின் அடிப்படையில் கைவிடப்பட்டுள்ளதனால் செலுத்தப்பட்ட முழுப் பணமாகிய ரூபா 323.36 மில்லியன் பணத்தில் ரூபா 163.75 மில்லியன் பணம் பிஸ்திரிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) பிங்கிரிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தில் நீர் வழங்கல் நடவடிக்கைகளுக்காக 2018 ஆம் ஆண்டிற்கு ரூபா 79.9 மில்லியன் தொகையும் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 319 மில்லியன் தொகையும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதி வரை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு தொடக்க வேலைகள் அளவீட்டு நடவடிக்கை, உத்தேச நீர்க்குழாய் முறைமையை நீடித்தல் என்பவற்றிற்காக ரூபா 137.1 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டு இறுதியளவில் இச்செயற்திட்டம் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும், இது சம்பந்தமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் செயற்திட்டத்தின் நீர் வழங்கலின் செயல்முன்னேற்றம் தொடர்பாக 2020 யூன் 30 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த அறிக்கையின் பிரகாரம் மண் புலனாய்வு நடவடிக்கையும் அளவீட்டு நடவடிக்கையும் 100 சதவீதம் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் உத்தேச நீர்க்குழாய்களைப் பதித்தல் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றம் 75 சதவீதமாகும். அவ்வாறே 225$m^3$ கொள்ளளவுடைய ஒன்று சேர்க்கும் 2 தாங்கிகள் நீர்ப்பம்பிகள், ஆய்வுகூடம் என்பவற்றை நிர்மாணிப்பது சம்பந்தமாக 75 சதவீதமான பௌதீக செயல்முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருந்ததுடன் தொடர்புபட்ட கைத்தொழில் மற்றும் மின்சார உபகரணங்களை வழங்குதல் மற்றும் பொருத்துதலின் செயல் முன்னேற்றம் 10 சதவீதமாகும்.

### 3.2.4 மின்சாரம் வழங்குதல்

------------------------------

(அ) மில்லனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்திற்கு மேலதிகமாக வகவத்த ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்திற்கும் மின்சாரம் வழங்கும் நோக்கத்தில் வகவத்த ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்திற்குரிய காணியில் மின்சார உப நிலையத்துடன் மின்சாரம் வழங்கும் நடவடிக்கை திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 2,400 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மின்சாரம் வழங்கும் நடவடிக்கையை 2020 ஆம் ஆண்டளவில் முடிவுறுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் மின்சார சபையின் 2019 நவம்பர் 15 ஆந் திகதிய செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தை 2021 திசெம்பர் 27 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2019 நவம்பர் 15 ஆந் திகதியளவில் ஒட்டுமொத்த செயல் முன்னேற்றம் 31

சதவீதமாகும். இது சம்பந்தமாக வரிசை அமைச்சினால் இலங்கை மின்சார சபைக்கு ரூபா 1,407,762,550 பணம் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணப்படுகின்ற நிலைமையில் தற்காலிக மின்சார வழங்கலை கைவிடுமாறு வரிசை அமைச்சினால் 2019 பெப்ரவரி 07 ஆந் திகதி மின்சார சபைக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 யூன் 30 ஆந் திகதிய செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் இதன் நிர்மாண நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை.

### 3.2.5 நீர்க்குழாய்களைப் பதிப்பதன் காரணமாக வீதியை மீண்டும் புனரமைப்புச் செய்யும் கட்டணம்

---

மில்லனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தில் நீர்க் குழாய்களைப் பதித்ததன் காரணமாக வீதியை மீண்டும் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கையை 2020 ஆம் ஆண்டளவில் முடிவுறுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா 100,000,000 ஆகும். இது சம்பந்தமாக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வீதி புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 52,792,600 பணம் செலுத்தப்பட்டது. இதன் செயல் முன்னேற்றம் சம்பந்தமாக 2019 நவம்பர் 18 ஆந் திகதி மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் இந்த வீதிகளின் வேலைகள் முடிவுறுத்தப்பட்டு அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க இச்செயற்பாடு சம்பந்தமாக பணம் செலுத்தப்பட்டிருந்தும் எதுவித செயற்பாடும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.2.6 கழிவு நீரை வெளியேற்றும் முறைமை

---

மில்லனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தில் கழிவு நீரை வெளியேற்றும் செயற்பாடு 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான செலவு ரூபா 250 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீதிமன்றத்தின் பணிப்புரையின் அடிப்படையில் செயற்திட்டம் கைவிடப்பட்டுள்ளதனால் இது சம்பந்தமாக எதுவித செயல்முன்னேற்றமும் அவதானிக்கப்படவில்லை.

### 3.2.7 ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக உடன்படிக்கைகளை மேற்கொள்ளல்

---

மில்லனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயம் சம்பந்தமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக சேவைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்திற்கு 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது அபிவிருத்தி தந்திரோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் பின்வருமாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

| நிறுவனம் | செலுத்தப்பட்ட மொத்த் தொகை |
|---|---|
| | ரூபா |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 205,000,000 |
| மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 52,792,600 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 323,363,157 |
| இலங்கை மின்சார சபை | 1,407,762,550 |
| மொத்தம் | 1,988,918,307 |

பிங்கிரிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயம் சம்பந்தமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக சேவைகளை வழங்கிய நிறுவனத்திற்கு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது அபிவிருத்தி தந்திரோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் பின்வருமாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

| நிறுவனம் | செலுத்தப்பட்ட மொத்த் தொகை |
|---|---|
| | ரூபா |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 350,000,000 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 137,100.000 |
| இலங்கை மின்சார சபை | 12,233,030 |
| மொத்தம் | 499,333,030 |

அதற்கிணங்க அபிவிருத்தி தந்திரோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் எழுத்து மூல உடன்படிக்கைகளில் உள்ளக்கப்படாது ரூபா 2,488,251,337 பணம் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டதுடன் 2020 யூன் 30 ஆந் திகதி வரையும் அந்த உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2.8 சுற்றாடல் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்

---

(அ) மில்லனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்திற்காக 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் IV-C பிரிவின் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரம் அத்தியாவசியமானதுடன் அதற்காக சுற்றாடல் தாக்கம் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். அதிகாரசபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு விண்ணப்ப பத்திரங்களை ஒப்படைக்கும் போது ரூபா 500,000 தொகையான நிருவாக ரீதியான கட்டணம் செலுத்தப்பட்டது. சுற்றாடல் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் நடவடிக்கையானது பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை குழுவின் அங்கீகாரத்தின் கீழ் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக இலங்கை முதலீட்டுச் சபையால் ரூபா 1,185,000 தொகையான வேலை ஆரம்பித்தல் முற்பணம் 2019 பெப்ரவரி மாதத்தின் போது செலுத்தப்பட்டது. சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்யும் செயற்பாடு சம்பந்தமாக 2018 திசெம்பர் 27 ஆந் திகதி கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் தொழில்நுட்ப பிரேரணையானது முதலீட்டுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இப்பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட அறிக்கையிடல் கால அட்டவணைக்கு இணங்க செயற்திட்டத்தை அமுல்படுத்தும் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடக்க அறிக்கையும் 49 நாட்களுக்குள் உப அறிக்கையும் 75 நாட்களுக்குள் இறுதி வரைபு அறிக்கையும், இந்த அறிக்கைகளுக்கு கருத்து தெரிவிப்பதற்கான பின்னைய 10 நாட்களுக்குள் இறுதியான தாக்கங்களை மதிப்பீடு செய்யும் அறிக்கையையும் சமர்ப்பிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தும் 2020 யூன் 30 ஆந் திகதி வரையும் எதுவித அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இது சம்பந்தமாக இலங்கை முதலீட்டுச் சபைக்கும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்குமிடையேயான எழுத்து மூலமான உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 நவம்பர் 08 ஆந் திகதி நடைபெற்ற பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுக் கூட்டத்தின் போது உத்தேச பிங்கிரிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை தோற்றுவிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் உரிய செயற்திட்டம் தொடர்பாக விரைவாக சாத்தியவள ஆய்வு அறிக்கையைத் தயாரிக்குமாறு பிரதம மந்திரியின் செயலாளர் இலங்கை முதலீட்டுச் சபைக்கு தெரியப்ப:டுத்தியிருந்தார். அதற்கிணங்க இச்செயற்பாடு முறையே இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் சமூக ரீதியான மற்றும் சுற்றாடல் ரீதியான சாத்திய வளத்தை போதியளவில் ஆய்வு செய்வதற்கு அந்த நிறுவனங்களுக்கு காணப்பட்ட இயலாமையின் அடிப்படையில் உரிய செயற்பாட்டை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்கு முதலீட்டுச் சபை தீர்மானித்திருந்தது. அதற்காக அந்த நிறுவனம் ரூபா 4,905,063 மதிப்பீட்டினைச் சமர்ப்பித்திருந்ததுடன் சபை ரூபா 4,265,272 தொகைக்கு உரிய செயற்பாடு கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. உரிய அறிக்கையானது 2018 ஆகஸ்ட் 27 ஆந் திகதியிலிருந்து 75 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் 2019 செப்தெம்பர் 06 ஆந் திகதி இலங்கை முதலீட்டுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 09 மாதங்களுக்கு அண்மித்த தாமதம் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மேற்கூறிய நிறுவனத்தை தெரிவு செய்வது சம்பந்தமாக பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்துடன் சுற்றாடல் தாக்கங்களின் ஆய்வு அறிக்கையினைத் தயாரிப்பதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கிக் கொண்ட பெறுமதி ரூபா 4,180,000 ஆக இருந்தும் (ரூபா 4,265,272+NBT) சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை கரபலான்ஓயாவினூடாக விடுவித்தல் நடைமுறைச் சாத்தியமற்றதன் காரணமாக பொருத்தமான விடுவித்தல் நடைமுறை தொடர்பாக ஆய்வு செய்தல் மற்றும் உத்தேச செயற்திட்ட வகைகளுக்கு மேலதிகமாக புதிய பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்பட்ட மருந்துச் செயற்திட்டத்தின் கழிவு நீர் முகாமைத்துவம் மற்றும் நச்சு கழிவு நீர் முகாமைத்துவம் தொடர்பாக மதிப்பீடு செய்தல் ஆகிய செயற்பாடுகள் காரணமாக ஆய்வின் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதன் அடிப்படையில் சுற்றாடல் தாக்கங்களின் ஆய்வு அறிக்கையினைத் தயாரிப்பதற்காக தொடக்க செயற்திட்ட பிரேரணையில் குறிப்பிட்ட மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்திற்கு மேலதிகமாக ரூபா 1,652,500 தொகையான மேலதிகக் கிரயத்தை இலங்கை

முதலீட்டுச் சபை செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| கிரயக் கூறு | தொடக்க செயற்திட்ட பிரேரணையில் குறிப்பிட்ட மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் | உள்ளபடியான கிரயம் | மேலதிக கிரயம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| நீரின் தரத்தை பகுப்பாய்வு செய்தல் | 300,000 | 750,000 | 450,000 |
| 24 hour noise measurement | 160,000 | 200,000 | 40,000 |
| Short point noise measurement | - | 37,500 | 37,500 |
| 1 hr vibration measurement | 50,000 | 100,000 | 50,000 |
| நீர்தர நிபுனர் கிரயம் | 200,000 | 500,000 | 300,000 |
| வாயு தர நிபுனர் கிரயம் | 200,000 | 375,000 | 50,000 |
| சமூக விஞ்ஞான நிபுனர் கிரயம் | 200,000 | 437,500 | 50,000 |
| தின்ம மற்றும் விசக்கழிவுப்பொருள் நிபுனர் கிரயம் | - | 375,000 | 375,000 |
| உதவிப் பதவியணியினர் கிரயம் | 150,000 | 300,000 | 150,000 |
| சுற்றாடல் தாக்கங்கள் ஆய்வு அறிக்கையின் அச்சிடல் கிரயம் | - | 150,000 | 150,000 |
| முழு மேலதிகக் கிரயம் | | | 1,652,500 |

மேலே குறிப்பிட்ட பணத்தில் ரூபா 1,051,500 பணம் இலங்கை முதலீட்டுச் சபையினால் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. திட்டமிடல் பலவீனம் இந்நிலைமை ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

## 3.3 புதிய முதலீட்டு வலயத்தை தோற்றுவிப்பதன் மூலமான பொருளாதாரத் தாக்கம்

---

உத்தேச ஏற்றுமதி செயன்முறைப்படுத்துதல் வலயத்தை ஸ்தாபிப்பதற்காக 2017 திசெம்பர் 15 ஆந் திகதிய 17/2955/752/042 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தினால் கீழே குறிப்பிடப்பட்ட ஒட்டுமொத்த இலக்குளை 2020 ஆம் ஆண்டின் போது அடைந்து கொள்வதற்கு அபிவிருத்தி தந்திரோபாயங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

(i) ஒரு ஆண்டிற்கு அமெரிக்க டொலர் 5 மில்லியன் நேரடி வெளிநாட்டு முதலீடு
(ii) தொழில் வாய்ப்புக்கள் - புதிய 1,000,000 தொழில் வாய்ப்புக்கள்
(iii) வருமானம் - அமெரிக்க டொலர் 6,000 தொகையான தனிநபர் மொத்த தேசிய உற்பத்தி
(iv) ஏற்றுமதி – மெரிக்க டொலர் 20 மில்லியன்
(v) அரசாங்க வருமானம் - மொத்த தேசிய உற்பத்தியின் 15%

அவ்வாறே 2018 செப்தெம்பர் 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விங்ஞானத்தின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிலிருந்து 06 ஆண்டுகள் காலத்திற்குள் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கும் அதனூடாக 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 01 பில்லியன், 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 2 பில்லியன், 2025 ஆம் ஆண்டின் போது ரூபா 04 பில்லியன், 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளில் ரூபா 06 பில்லியன் மற்றும் 2031 ஆம் ஆண்டுவரை ரூபா 8 பில்லியன் தொகையுமான இறக்குமதியை மிகைத்த ஏற்றுமதி இலக்கு எதிர்பார்க்கப்பட்டது.

எவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டளவில் உரிய காணிகளைச் சுவீகரிக்கும் செயற்பாட்டை முடிவுறுத்த வேண்டியிருந்தும் 2020 யூன் 30 ஆந் திகதி வரை உரிய காணிகளைச் சுவீகரிக்கும் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு முடியாமையின் காரணமாக உத்தேச மிலனிய ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தை ஸ்தாபிக்கும் போது பெருந்தெருக்களை நிர்மாணித்தல், மின்சாரத்தை வழங்குதல், நீர் வழங்கல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளை திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்ற முடியாதிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது. இதற்கிணங்க மேலே குறிப்பிட்டவாறு இலங்கை அரசாங்கத்தினால் அடைந்து கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த பொருளாதார நலன்களை திட்டமிட்ட காலப்பகுதிக்குள் அடைந்து கொள்வதற்கு முடியாத நிலைமை அவதாகிக்கப்பட்டது.

## 4. சிபார்சுகள்

------------------

4.1 செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து பிரிவுகள் தொடர்பாக கவனம் செலுத்தி முறைப்படியாகத் திட்டமிடல்.

4.2 கிரய மதிப்பீடு மற்றும் எதிர்வுகூறல்களை நடைமுறைச் சாத்திய அடிப்படையில் அனைத்து பிரிவுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி மிகவும் சரியாகத் தயாரித்தல்.

4.3 செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்படுகின்ற சாத்திய வள ஆய்வுகளின் போது எதிர்கால அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களுடனான துறைகள் தொடர்பாக முறையாக கவனம் செலுத்துதல்.

4.4 காணிகளைச் சுவீகரித்ததன் பின்னர் மாத்திரம் உட்கட்டமைப்பு வசதிகளை அல்லது சேவைகளை வழங்கும் ஒப்பந்தங்களை வழங்குதல்.

4.5 உட்கட்டமைப்பு வசதிகள் அல்லது சேவைகளை வழங்கும் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு முன்னர் உரிய நிறுவனங்களுடன் முறைப்படிகாக எழுத்துமூல உடன்படிக்கைகளை மேற்கொள்ளல்.

4.6 உட்கட்டமைப்பு வசதிகள் அல்லது சேவைகளை வழங்கும் ஒப்பந்தம் சம்பந்தமாக ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற கிரய மதிப்பீடுகளின் சரியான தன்மை மற்றும் சிக்கனத்தன்மை சம்பந்தமாக விசேட கவனம் செலுத்துதல்.

4.7 உட்கட்டமைப்பு வசதிகள் அல்லது சேவைகளை வழங்கும் ஒப்பந்தம் சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட அளவீட்டுப் பட்டியலின்றியும் எழுத்துமூல உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னரும் வேலைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்காதிருத்தல்.

4.8 உட்கட்டமைப்பு வசதிகள் அல்லது சேவைகளை வழங்கும் ஒப்பந்தங்களை அமுல்ப்படுத்தும் போது அரசாங்க நிதிகளின் சிக்கனத்தன்மை, செயற்திறன் மற்றும் விளைதிறனைப் பாதுகாக்கும் வகையில் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல்

4.9 உடன்படிக்கை செய்த சேவைகளை வழங்கும் உடன்படிக்கைகளில் மேலதிக கிரயத்தை மேற்கொள்ளல் இடம்பெறாத வகையிலும் திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இயலுமான வகையிலலும் சாதகமான நிபந்தனைகளை உள்ளடக்குதல்.

ஒப்பம்./டபிள்யு. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டப்லியு .பீ.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் அதிபதி

2020 திசெம்பர் 22